07.08.2023
O.S.No.181/2014

வா.சா.2 திரு.முத்துலிங்கம் த.பெ.ராஜேந்திரன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**1** மற்றும் **5** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு **விசாரணை** தொடர்ச்சி

1. இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.328/2014 ல் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிராக சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு எண்.15/2021 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வெள்ளலூர் கிராம சர்வே எண்.315/14 இந்த வழக்கிலும் சரி, சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.76/2014 (54/2019) வழக்கிலும் தாவா சொத்தாக இல்லை என்றால் சரிதான். தாவாசொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்ற உரிமை பிரச்சினை உள்ளது என்றால் எனது தந்தை எங்களுக்கு கொடுத்த சொத்தாகும், ஆனால் பிரதிவாதிகள் மோசடியாக பத்திரம் போட்டுள்ளார்கள். எனது பெரியப்பா மகாலிங்கம் சிறுநீரக கோளாறு பிரச்சினை ஏற்பட்டு 6, 7 ஆண்டுகாலமாக தொடர்ச்சியான மருத்துவசிகிச்சையில் இருந்து வந்தார் என்றால் சுமார் 3 ஆண்டுகளாக மருத்துவ சிகிச்சையில் இருந்து வந்தார். முத்தையா காலமான பின்பு அவரது சொத்துக்களை பொறுத்து எங்களுக்கும் எங்களது பெரியப்பா வீட்டாருக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.76/2014 தாக்கல் செய்யப்பட்ட பின்பு நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான்.

2. அசல் வழக்கு எண்.328/2014 வழக்கில் எனது தந்தைக்கு பாத்தியப்பட்டதாக சொல்லி என்னிடம் காட்டப்படும் பட்டாவினை தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான், அதோடு சேர்ந்து மற்ற சொத்துக்களும் அவருக்கு பாத்தியப்பட்டிருந்தது. அந்த பட்டா சான்றிட்ட நகல் பி.வா.சா.**ஆ-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே வழக்கில் என்னிடம் காட்டப்படும் கம்புயூட்டர் பட்டா தாக்கல்செய்திருந்தேன் என்றால் சரிதான், அந்த ஆவணம் சான்றிட்ட நகல் பி.வா.சா.**ஆ-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தாத்தா முத்தையா எந்த தேதியில் இருந்து புத்தி சுவாதீனம் இல்லாமல் இருந்தார் என்பதை பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, ஆனால் கடைசி காலத்தில் அவர் புத்தி சுவாதீனம் இல்லாமல் தான் இருந்தார். எனது பிராதில் முத்தையா அவர்கள் காலமாவதற்கு 5 வருடத்திற்கு முன்பு நோய்வாய்பட்டு, மூளைவாதம் ஏற்பட்டு புத்தி சுவாதீனம் இல்லாமல் படுத்த படுக்கையாக இருந்தார் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு படுத்த படுக்கையாக இருந்ததற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. எனது அத்தை பாப்பா என்பவர் அவருக்கு சீதனமாக கொடுக்கபட்டதாக சொல்லி ஒரு 3 இலக்க சொத்தை காண்பித்து எனது பெரியப்பா மனைவி ஜெயம் மீதும், எனது தாத்தா முத்தையா மீதும் அசல் வழக்கு எண்.265/2011 என்ற வழக்கை இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கின் பிராது நகலை அசல் வழக்கு எண்.76/2014 வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பிராதில் முத்தையா புத்தி சுவாதீனம் இல்லாதவர் என்று எங்கும் குறிப்பிடவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் எனது தாத்தா முத்தையா இறந்த உடன் அவரது வாரிசாக எங்கள் குடும்பத்தாரையும், எங்களது பெரியப்பா குடும்பத்தாரையும் மற்றும் என்னுடைய மற்றொரு அத்தையையும் சேர்த்துள்ளனர் என்றால் சரிதான்.

அந்த வழக்கில் எங்கள் குடும்பத்தார்கள் அனைவரும் வழக்கை நடத்தாமல் ஒருதலைபட்ச தீர்ப்பு எங்களுக்கு எதிராக வழங்கப்பட்டது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.265/2011 தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனது அத்தை பாப்பா என்பவர் வெள்ளலூர் கிராமத்திலேயே வசித்து வருபவர் என்றால் சரிதான். எனது அத்தை பாப்பா, முத்தையா விட்டு சென்ற அனைத்து சொத்துக்களிலும் பங்கு உள்ளது என தாவா செய்து வருகிறார் என்றால் சரிதான்.

4. இந்த தாவா சொத்தையும் சேர்த்துதான் அசல் வழக்கு எண்.164/2023 என்ற வழக்கை சார்பு நீதிமன்றத்தில் எனது அத்தை பாகபிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதன் பிராதுதான் என்னிடம் காண்பிக்கப்படுவது என்றால் சரிதான். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ**-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசல் வழக்கு எண்.76/2014ல் முத்தையா மற்றும் எனது பெரியப்பா மகாலிங்கம் ஆகியோர்கள் கடந்த 2006ம் வருடம் வருவாய் துறையில் நேரிடையாக ஆஜராகி வாக்குமூலம் கொடுத்து எனது தந்தையின் வாரிசுதாரர்கள் பெயருக்கு பட்டா மாற்றப்பட்டது என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான், அந்த சொத்து எனது தந்தைக்கு ஏற்கனவே கொடுத்துவிட்டார்கள், அவர் பட்டா மாற்றம் செய்யாமல் இறந்து விட்டார், அதனால் எனது தாத்தாவும் பெரியப்பாவும் வாக்குமூலம் கொடுத்ததன் பெயரின் அடிப்படையில் எங்கள் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டது.

5. அசல் வழக்கு எண்.54/2019ல் வட்டாட்சியர் அலுவலகத்தில உள்ள RTR எண்.2578/2006 ல் உள்ள கோப்புகள் கேட்டு மனு செய்திருந்தோம் என்றாலும் அந்த மனுவின் சான்றிட்டந கல் தான் என்னிடம் காண்பிக்கப்படுகிறது என்றாலும் சரிதான், அந்த ஆவணம் பி.வா.சா.ஆ**-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கோப்பை வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து அப்படி ஒரு கோப்பே இல்லை என கூறி தாக்கல் செய்யவில்லை என்றாலும் வாய்மொழி வாக்குமுலத்தின் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்யப்படுவதில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றாலும் அதை பற்றி எனக்கு தெரியாது, ஆனால் அந்த கோப்பை கடைசிவரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 2006ம் ஆண்டு எனது தாத்தா முத்தையா நல்ல மனநிலையில்தான் இருந்தார். அசல் வழக்கு எண்.265/2011 வழக்கில் எனது தாத்தா முத்தையா நீதிமன்றத்தில் ஆஜராகி 09.04.2012 அன்று எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளதால், அப்போது வரை அவர் நல்ல மனநிலையில் தான் இருந்துள்ளார் என்றால் அந்த எதிர்வழக்குரை தாக்கல்செய்தபோதெல்லாம் அவர் சுயநினைவு இல்லாமல் இருந்தார்.

6. அந்த வழக்கில் வாதியான எனது அத்தை எனது தாத்தா சார்பில் போடப்பட்ட எதிர் வழக்குரையை எனது தாத்தாவால் போடப்படவில்லை என்று ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றால் அந்த விவரம் எனக்கு தெரியவில்லை. முத்தையாவை, மகாலிங்கம் குடும்பத்தார்கள் தான் ஆரம்பம் முதல் கவனித்து வந்தார்கள் என்றாலும் அதனால் அவருக்கு பாத்தியப்பட்ட சுய சம்பாத்திய சொத்தை மகாலிங்கத்தின் மகன் முல்லைச்செல்வனுக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல, முதலில் எனது தந்தைக்கு சொத்தை கொடுத்து விட்டு அதே சொத்தை முல்லைச் செல்வனுக்கு எழுதி வைத்துள்ளதாக கூறுகிறார். 1 முதல் 4 இலக்க சொத்துக்களில் நாங்கள்தான் அனுபவத்தில் இருந்து வருகிறோம் என்று பிராது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா

சொத்துக்கள் எங்களது அனுபவத்தில் உள்ளதாக சொல்லப்படும் போது 1 முதல் 5 பிரதிவாதிகள் காம்பவுண்டு சுவர் எழுப்புவதற்கு என்ன காரணம் என்றால் அவர்களது பகுதியில்தான் சுவர் எழுப்பி உள்ளார்கள், எங்களது இடத்திற்கும் அவர்களது இடத்திற்கும் இடையே சந்து விடாமல் எங்களது சுவரோடு சேர்த்து அவர்களது காம்பவுண்டு சுவரை ஒட்டி கட்டியுள்ளார்கள். எனது தந்தையும் எனது பெரியப்பாவும் இறந்த பின்பு முத்தையா உயிருடன் இருந்த போது அவ்வாறு கட்டினார்கள்.

7. எனது பிராதில் 05.06.2014 அன்று 1 முதல் 5 பிரதிவாதிகள் தாவா சொத்தை மறித்து காம்பவுண்டு சுவர் எழுப்பி உள்ளதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். எனது பிராதில் காட்டப்பட்டுள்ள 1, 2 இலக்க சொத்துக்களில் நான்குமாலில் சந்து எதுவும் காணப்படுகிறதா என்றால் இல்லை. வா.சா.ஆ-19 ஆவணமான மாதிரி வரைபடத்தில் 1 மற்றும் 2 இலக்க சொத்துக்களுக்கு இடையே சந்து இருப்பதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் பிராது சொத்து விவரத்தில் அவ்வாறு எதுவும் காட்டப்படவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே தாவா 1 மற்றும் 2 இலக்க சொத்துக்களுக்கிடையே சந்து எதுவும் இல்லை என்பதால்தான் சொத்து விவரத்தில் சந்து இருப்பதாக காட்டப்படவில்லை என்றால் சரியல்ல, எங்கள் வீட்டு சுவற்றில் சன்சைடு உள்ளது, அந்த சன்சைடை ஒட்டி பிரதிவாதிகள் சுவர் எழுப்பியுள்ளனர், அதில் சிறிய சந்து உள்ளது. தாவா 1ம் இலக்க சொத்திற்கு மேற்குபுறம் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது என்றால் சரிதான்.

8. தாவா 2ம் இலக்க சொத்து, 1ம் இலக்க சொத்திற்கு வடக்கே உள்ளது என்றால் சரிதான். 2ம் இலக்க சொத்திற்கும் அதற்கு மேற்கே உள்ள பகுதிகளுக்கும் செல்லக்கூடிய பாதையானது 2ம் இலக்க சொத்திற்கு கிழக்கே உள்ள பாதை வழியாக தான் செல்லமுடியும் என்றால் சரிதான். 1 வது இலக்க சொத்தின் மேற்குபுற பகுதிக்கு போக வேண்டும் என்றால் 2ம் இலக்க சொத்தின் வழியே சென்று, அதற்கு மேற்குபுறம் சென்று, தெற்கு திசை நோக்கி திரும்பிதான் செல்லவேண்டும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 3 புகைபடங்கள் தாவா 1 மற்றும் 2 லக்க சொத்துக்கள் மற்றம் 1 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கான சொத்துக்கள் ஆகும். அது பி**.**வா**.**சா**.**ஆ**-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2ம் இலக்க சொத்தின் வடமேற்கு மூலையில் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்குரிய கழிவறை உள்ளது என்றால் எனக்கு சரியாக தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகைப்படம் தான் தாவா 3ம் இலக்க சொத்தை காட்டும் புகைப்படம் என்றால் சரிதான். அந்த புகைப்படம் பி**.**வா**.**சா**.**ஆ**-6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. அதில் உள்ள ஷெட்டு எங்களது டிராக்டரை நிப்பாட்டுவதற்காக எங்களால் போடப்பட்டது. 2 முதல் 4 இலக்க சொத்துக்கள் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் நான் இந்த வழக்கிற்காக 3ம் இலக்க சொத்தில் நாங்கள் ஷெட் அமைத்தோம் என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 3ம் இலக்க சொத்திற்கு வடக்குபுறம் உள்ள இடம் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு பாத்தியபட்டது என வா.சா.ஆ-19 வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் தரப்பினருக்கும் எங்களது பெரியப்பா குடும்பத்தாருக்கும் மிகவும் மனசிரமம் உள்ளது என்றால் சரிதான். எனது பெரியப்பா தரப்பினர்களிடம் வேலை செய்த போஸ் என்பவரை கடப்பாரையால்

தாக்கியதாக குற்ற எண்.123/23 என்ற வழக்கு உள்ளது என்றால் சரிதான், ஆனால் நான் அவ்வாறு எதுவும் கடப்பாரையால் தாக்கவில்லை. அசல் வழக்கு எண்.76/2014 வழக்கில் எனது தாத்தா முத்தையா 2004 முதல் புத்தி சுவாதீனம் இல்லாமல் இருந்ததாக நான் சாட்சியம் அளித்துள்ளதாக காணப்படுகிறது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அதே போல் அந்த வழக்கில் எனது தாத்தா முத்தையாவை கடத்திவிட்டு பத்திரம் பதிந்துவிட்டார்கள் என சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு முத்தையா கடத்தப்பட்டதற்கு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றும் முத்தையா 1 முதல் 5 பிரதிவாதிகளின் கட்டுப்பாட்டில்தான் இருந்தார் என்றும் எனது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான்.

10. அசல் வழக்கு எண்.76/2014 வழக்கில் முத்தையா 2004ம் ஆண்டு முதல் புத்தி சுவாதீனம் இல்லாமல் இருந்தார் என சாட்சியம் அளித்துள்ளதாக எனது தரப்பில் காணப்படுகிறது என்றால் சரிதான். 2006ம் ஆண்டு அச்சிடப்பட்ட வரி ரசிது புத்தகத்தில் 2004ம் ஆண்டு வரி கட்டியதாக ரசிது வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பணம் கட்டினேன், அவர்கள் ரசிது கொடுத்தார்கள், வேறு ஒன்றும் எனக்கு தெரியாது. எனது தந்தைக்கு தாவா சொத்து ஒதுக்கப்பட்டிருந்தால் எனது தாத்தா முத்தையா மற்றும் எனது பெரியப்பா மகாலிங்கம் ஆகியோர்கள் உயிருடன் இருந்தால் எழுத்துபூர்வமாக வாங்கியிருப்போம் என்றால் அவர்கள் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் பட்டா மாற்றப்பட்டது. வாக்குமூலத்தின் அடிப்படையில் பட்டா மாற்ற முடியாது வருவாய் துறையினரே தங்களது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் தாவா சொத்திற்கு எங்களது பெயரில் பட்டா எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல, தாவா சொத்திற்கு எங்கள் பெயரில் பட்டா இல்லை.

11. தாவாசொத்திற்கு எங்கள் தாத்தா பெயரில் பட்டா இருந்தது, எங்கள் தந்தைக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை பொறுத்து நாங்கள் அனுபவித்து வரி செலுத்தி வந்தோம், பட்டா எதுவும் இல்லை. தாவா 1ம் இலக்க சொத்திற்கு தெற்கே எங்களுக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது, அந்த வீட்டை நாங்கள் 3ம் நபரிடம் இருந்து கிரயம் வாங்கினோம். அதற்கு தெற்குபுறம் உள்ள காலியிடத்தில் ஒரு ஷெட்டும், கழிவறையும் கட்டியுள்ளோம். சர்வே எண்.759/33 ல் வீடு இருந்ததாக சொல்லி அசல் வழக்கு எண்.76/2014 வழக்கில் நான் காட்டியுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் தற்போது வீடு இல்லை, சிறிய ஓட்டுவீடாக இருந்ததை காலி செய்து விட்டோம், அது தற்போது காலியிடமாக உள்ளது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா சொத்திற்கான புல வரைபடம் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

12. வா.சா.ஆ-3 புல வரைபடத்தில் சர்வே எண்.759/38 க்கு வடபுறம் காலியிடம் உள்ளது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் இணைந்த புல வரைபடத்தில் சர்வே எண்.759/38 க்கு வடபுறம் சர்வே எண்.759/46 இருப்பதாக காணப்படுகிறது என்றால் சரிதான், தற்போது அந்த காலியிடம் பட்டாவாகியுள்ளது. (குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)